# වාරණ வாரணம்

"වාරණ/වාරණම්" ද්විභාෂිකව (සිංහල හා දමිළ) ශ්‍රී ලංකාවේ පළවන ප්‍රථම සොබාදහම පිළිබඳ සඟරාව

"வாரணம்/வாரண" இலங்கையில் முதன் முதலில் இரு மொழிகளில் (சிங்களம் மற்றும் தமிழ்) வெளியிடப்படும் இயற்கைசார் சஞ்சிகை

"Warana/Varanam" the First Bilingual (Sinhala and Tamil) Magazine on Nature to be Published in Sri Lanka

10 වෙළුම 4 සහ 5 කලාප දෙසැම්බර් 2017 | இதழ். 10 இலக்கம் 4 மற்றும் 5 மார்கழி 2017 | Vol. 10 No. 4 & 5 December 2017



ISSN 2235-9850

ශ්‍රී ලංකා වනසත්ව හා ස්වභාව ආරක්ෂක සංගමයේ ප්‍රකාශනයකි

இலங்கை வனசீவராசிகள் மற்றும் இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் வெளியீடு

A Publication of the Wildlife & Nature Protection Society (WNPS) of Sri Lanka

www.wnpssl.org www.facebook.com/wnpssl twitter.com/wnpssl

# இயற்கையுடன் மக்களை ஒன்றிணைத்தல்- கலாநிதி. பரீனா ருசைக்

# Connecting people to nature - Dr. Fareena Ruzaik




Image courtesy: Avantha Artygala

உலக சுற்றாடல் தினம் என்பது உலகளாவியரீதியில் கொண்டாடப்படுகின்ற மிக முக்கியமான சர்வதேச தினமாக விளங்குவதுடன் இதன் மூலம் பொதுமக்கள் மத்தியில் சூழல் தொடர்பிலான அறிவு வளர்க்கப்படுகிறது. இதனாலேயே ஐக்கியநாடுகள் சபையானது சுற்றாடல் தொடர்பான உலகளாவிய கவனத்தை மையப்படுத்தியும், நிலைபேண் சுற்றாடல் சார்ந்த செயற்திட்டங்களை ஒழுங்கமைத்தும் 1972 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு வருடமும் ஆனி மாதம் 5ஆம் திகதியை சுற்றாடல் தினமாக அனுஷ்டித்து வருகின்றது. இயற்கையுடன் மக்களை ஒன்றிணைத்தல் மற்றும் ஏழு பில்லியன் மக்களை இயற்கைத் தொடர்பில் அறிந்துகொள்ள ஊக்குவிப்பதும், இயற்கை எழில் அழகைப் பாராட்டுவதுமே இந்த வருட சுற்றாடல் தினத்தின் கருப்பொருள் ஆகும்.

இப்புவியிலுள்ள ஒவ்வொரு மனிதனும் பல்வேறு தேவைகளுக்காக மட்டுப்பாடுடைய இயற்கை வளங்களைப் பயன்படுத்துகின்ற பொழுது பொறுப்புணர்வுடன் பயன்படுத்த வேண்டியதுடன், ஒவ்வொரு மனிதனினது செயற்பாடுகளும் நேரடியாக இயற்கை அன்னையை நேர்நிலையாகவும், எதிர்நிலையாகவும் பாதிக்கின்றது என்பதை அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

இவ்வருடத்தில் நடைபெறுகின்ற சர்வதேச சுற்றாடல் தினமானது இலங்கைக்கு மிக முக்கியமானதாகும். 2017 ஆம் ஆண்டு சித்திரை நான்காம் திகதி இலங்கையில் நடைபெற்ற மீதொட்டமுல்லை குப்பைமேடு அனர்த்தமே இதற்கான காரணமாகும். கிட்டத்தட்ட 40 பேர் உயிரிழந்ததோடு, 130 வீடுகள் முழுமையான சேதத்திற்கு உள்ளானது. 1,110 குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டன. முறையற்ற விதத்திலான குப்பைக் கொட்டுதல், ஒழுங்கீனமான முகாமைத்துவம் மற்றும் அனர்த்தத்திற்கு உள்ளாகக்கூடிய பிரதேசங்கள், பொதுமக்களின் அத்துமீறிய குடியிருப்புக்கள் போன்றவையே இச்சம்பவத்திற்கான பிரதான காரணங்களாகும். இது போன்றதான சம்பவம் ஒன்று 2008 ஆம் ஆண்டு சித்திரை 24 ஆம் திகதியும் நடைபெற்றதுடன் குப்பைமேடு சரிந்து விழுந்ததில் 100 வீடுகள் முழுமையாக சேதமானதுடன் 3 பேரின் உயிர் பிரிவதற்கும் காரணமாகியது.

தற்போது இலங்கையின் சில பிரதேசங்கள் தென்மேற்கு பருவமழை காரணமாக வெள்ளம் மற்றும் மண்ணரிப்பு போன்றவற்றிற்கு முகம் கொடுக்கின்றன. 2017 ஆம் ஆண்டு ஆனி மாதம் 4 ஆம் திகதி மாத்தறை, காலி, களுத்துறை, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, கம்பஹா, கேகாலை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டதோடு 212 உயிரிழப்புக்களும் ஏற்பட்டன. இதில் 79 பேர் காணாமல் போயுள்ளதோடு 93 பேர் காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். 604,713 பேர் மொத்தமாகப் பாதிக்கப்பட்டதுடன் 8473 வீடுகள் சேதமடைந்தன. 157,177 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளனர். 2016 ஆம் ஆண்டு சித்திரை மற்றும் வைகாசி மாதங்களிலும் இதற்கு ஒத்ததான அழிவொன்று ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்விரண்டு அழிவுகளுக்கும் பொதுவான ஒரு காரணியாக முறையற்ற கழிவகற்றல் முகாமைத்துவத்தினைக் குறிப்பிடலாம். என்னுடைய ஆய்வின் படி (2014) குப்பைக்கூழங்களுக்கு அண்மையில் வசிக்கின்ற கிட்டத்தட்ட 57 % மான பெண்களும், 43.3 % மான ஆண்களும் வெவ்வேறுபட்ட சுகாதாரப் பிரச்சினைகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 65.5 % மான சிறுவர்களும், 75 % மான குப்பை அள்ளுபவர்களும் மற்றும் 70% மான கழிவுகளைச் சேர்ப்பவர்கள், வாகன ஓட்டுனர்கள் பலதரப்பட்ட சுகாதாரப் பிரச்சினைகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரசு மக்களை இயற்கையுடன் தொடர்புபடுத்துவதில் தோல்வி கண்டுள்ளமை மற்றும் தனிநபர்கள் நாட்டின் பிரஜைகள் எனும் வகையில் சுற்றாடல் தொடர்பில் கொண்டுள்ள கடமையிலிருந்து தவறுகின்றமை ஆகிய இவ்விரண்டும் இவ்அழிவுகளுக்கான பிரதான பின்புலக் காரணங்களாக மாறியுள்ளன.

மக்களின் நல்வாழ்விற்காக சுற்றாடலைப் பாதுகாக்கவும், அதனை விருத்தி செய்யவும் அரசியலைமைப்பானது (உறுப்புரை மற்றம் 14 உறுப்புரை 27) அனுமதி வழங்கியுள்ளது. 1977

"මිනිසා සොබාදහමට යා කිරීම" 2017 වර්ෂයේ ලෝක පරිසර දින සැමරුම් තේමාව විය. මෙහිද බිලියන 7ක් ඉක්මවූ ජනගහනයක් සොබාදහම අවබෝධ කරගැනීමටත්, එය ගවේෂනය කිරීමටත්, එහි ඇති වටිනාකම අගය කිරීමටත් අවධානය යොමු කරන අතර, පෘථිවිය මත ඇති සීමිත සම්පත් වගකීම් සහගතව භාවිතය සඳහා පෘථිවි වැසියන් යොමු කිරීමත් මෙහි මූලික අභිමතාර්ථ විය.

පසුගිය වසර තුලදී ශ්‍රී ලංකාව ගං වතුර, නාය යාම් ආදී ස්වාභාවික අනතුරු රාශියකට මුහුණ දුන් අතර 2017 අප්‍රියෙල් 15 දින මීතොටමුල්ලේදී කසල කන්දක නාය යාමකටද මුහුණ දුනි. 2008 අප්‍රියෙල් 24 දින ද බ්ලූමැන්ඩල්හිදි මෙවන්ම ආපදවක් වාර්තා වූ අතර මේවා සඳහා නිරවද්‍ය නොවන අපද්‍රව්‍ය බැහැරකිරීම සහ ඒවායේ නිසි කළමණාකරණයක් නොතිබීම හේතු වී ඇත. මිනිසා සිය අරමුණු සහ අභිමතාර්ථ ඉටුකර ගැනීමේදී ස්වභාව ධර්මය සහ සම්බන්ධවීම ඉතාමත්ම අවම මට්ටමක පැවතීම මෙවන් ඛේදවාචක ඇති වීම සඳහා හේතු වී ඇත. මෙවන් අතපසුවීම් තුලින් ඇතිවන්නා වූ ව්‍යවසන නිසා නිරපරාදේ ජීවිතත්, දේපලත් හානි වීම් කණගාටුදයක තත්වයකි.

ව්‍යවස්ථාව මගින් ස්වභාව ධර්මය ආරක්ෂා කිරීමට, සංරක්ෂණය කිරීමට සහ වැඩිදියුණු කිරීමට අවශ්‍ය ගිවිසුම් පනවා ඇති නමුත් 1977 සිට ඉහළ යන ඉල්ලුමට සරිලන අවශ්‍යතා ලබාදීම සඳහා විවිධ ව්‍යාපෘති ඇති කිරීම මගින් ස්වභාව ධර්මය කෙරෙහි ඇති අවධානය හීන වීඇත. ඒ නිසාම, මිලියන 20ක් ඉක්මවූ ජනතාව ස්වභාව ධර්මයට යා කිරීමට කාලය එළඹ ඇත. ස්වභාවධර්මය පිළිබඳ දැනුවත් කිරීමේ වැඩසටහන් ඇති කිරීමත්, ඒ හා බැඳී ඇති නීති රීති තර කිරීමත් මේ සඳහා සිදු කළ හැකිය. තනි පුද්ගලයෙකු ලෙස නොව, සියලුම දෙනා එක්ව තිරසාර සංවර්ධන අරමුණු කරා ලංවීමේදී පාරිසරික ආරක්ෂාව තහවුරු කරමින්, ජීවිත හානි හා දේපළ හානි අවම කිරීමට වග බලා ගැනීම යුතුකමක් කොට සැලකිය යුතුය.

ஆம் ஆண்டு தொடக்கம் அரசாங்கத்திலுள்ள வெவ்வேறுபட்ட அமைப்புக்கள் அதிகரித்து காணப்படுகின்ற கேள்விக்கு ஏற்றவிதத்தில் தமது பொருளாதாரக் கொள்கைகளை மாற்றிக் கொள்ளவும், அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைபடுத்தவும் செய்கின்றனவே ஒழிய எமது செழிப்பிற்கும், சிறந்த வாழ்க்கைக்கும் உதவியளிக்கின்ற இயற்கைத் தொடர்பில் அக்கறை செலுத்தவில்லை. இயற்கை தருகின்ற விடயங்களைப் பணத்தினால் அளவிடுவது கடினமானதாகும்.

இரு அழிவுகளுக்கும் முறையற்றக் கழிவகற்றல் முகாமைத்துவமே பொதுவான காரணமாகும் என நான் நம்புகின்றேன். ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 6400 – 7000 மெற்றிக் தொன் வரையிலான கழிவுகள் இலங்கையில் உற்பத்தியாவதுடன் இலங்கையின் வருடாந்த வளர்ச்சிவீதம் 1.2% ஆகும். 80% கழிவுகளுக்கு நகரங்களே காரணமாகும். இது தவிர்ந்து உள்ளூர் மூலம் நாளாந்தம் 2500 மெற்றிக் தொன் வரையில் கழிவு சேர்க்கப்படுகின்றது (மத்திய சுற்றாடல் அமைச்சு, 2014). ஏனைய கழிவுகள் நீர்நிலைகள், கால்வாய்கள், வீதிகள், பொது இடங்கள் மற்றும் திறந்த பரப்புகளில் எரித்தல் (இது குறிப்பாக கிராமப்புறங்களில் நடைபெறுகின்றன) போன்றவற்றில் அகற்றப்படுகின்றன.

வெவ்வேறுபட்ட மேல் மட்டத்திலிருந்து, கீழ் மட்டத்திற்கான பல் நோக்கங்களைக் கொண்ட விழிப்புணர்வுத் திட்டங்கள் விரிவாக்கப்படவும், சிறந்த மாற்றத்திற்கான உறுதியான சுற்றாடல் சார்ந்த சட்டங்களை நடைமுறைப்படுத்தவும் 20 பில்லியன் மக்களை இயற்கையுடன் ஒன்றிணைப்பதற்கான காலம் வந்துவிட்டது. தனியமைப்பினால் இவ்விலக்கினை அடைந்துகொள்ள முடியாது. அனைத்து அரசதுறையினரும் ஒரு குடையின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டு ஒழுங்கமைந்து, நிலையான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும்.

நிலைத்திருத்தலின் தொடர்ச்சி என்பது தனிநபரின் நடத்தையில் மாற்றத்தை விரும்புவதோடு பொதுமக்களின் மனரீதியான மாற்றத்தை எதிர்பார்ப்பதுமாகும். அதாவது சிறந்த தெரிவு, குறைந்த நுகர்வு மட்டுமன்றி வினைத்திறனான பசுமை உற்பத்தி மற்றும் நுகர்வினை இது குறிப்பிடுகின்றது. இவற்றிற்கு வினைத் திறனானக் கொள்கைகள் உதவலாம். அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்கள் சுற்றாடல் திட்டங்களுக்கு ஆதிக்கம் செலுத்துவதாக இருக்க வேண்டியதுடன் அல்லது சிக்கலான சூழலியல், சமூகப் பொருளாதாரச் சவால்களை வெற்றிகொள்ளுவதற்கான நடத்தைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

மேலும் வளங்களை நிலைத்திருக்கச் செய்யும் வகையில் பயன்படுத்துவதற்கு ஊக்குவிப்பதினூடாக நிலைத்திருக்கத்தக்கதான உற்பத்தியை நடைமுறைப்படுத்தல் வேண்டும். புதிய பசுமை உற்பத்திகளுக்கு முதலீடு செய்வதற்கு நுகர்வாளர்களின் சமூகப் பொறுப்புணர்வை அபிவிருத்தி செய்வதுடன், தனியார் நிறுவனங்களையும் ஊக்குவிக்க வேண்டும். பசுமை வளர்ச்சிக்குத் தேவையான நிபந்தனைகளை நடைமுறைபடுத்த வேண்டியதுடன் அனைத்து சுற்றாடல் பாதுகாப்பு சார்ந்த விடயங்களும் அவர்களின் அனைத்து வியாபாரங்களும் இந்நிபந்தனைகளின் படி செயற்படுத்தப்பட வேண்டும்.

வளங்களின் நுகர்வு தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வூட்டல் மற்றும் அடிமட்டத்தினர் மத்தியில் ஆதரவினைப் பெறுவதினூடாக இதில் பங்குபற்றுகின்ற அனைத்துப் பிரிவினரின் செயற்பாடுகளையும் சுதந்திரமாகக் கண்காணிப்பதற்கு சிவில் சமூகமானது பிரதான வகிபங்கு உடையதாகக் காணப்படுகின்றது.

மேலும் அரசாங்கமானது மக்களைக் குடியமர்த்துகின்ற போது அதிக பாதிப்புடைய இடங்களை நாடளாவியரீதியில் அடையாளம் காண வேண்டியதுடன் அதற்கான சரியான தீர்வினையும் வழங்க வேண்டும். எதிர்காலச் சந்ததியினருக்கான சிறந்த சுற்றாடலுக்காக அரசாங்கமானது சுற்றாடல் தொடர்பில் உயர்மட்டத்திலிருந்து தாழ் மட்டம் வரையில் நடத்தைசார் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டியதுடன் அனைத்து அரச துறையினரையும் மையமாகக் கொண்டு அவர்களை வலுவூட்டி அதனூடாகத் தேவையான கொள்கைகளை உருவாக்க வேண்டும்.

This year's (2017) theme is "Connecting People to Nature", and it encourages seven billion people to understand and explore nature, appreciating its natural beauty. It provides the message that every person on this earth has an implied responsibility to utilise the limited resources of nature for multifarious purposes with more care, understating the fact that every activity of a person will directly impact Mother Nature either positively or negatively.

Sri Lanka has faced several natural disaster events during this year such as flooding, landslides and garbage mountain incident. The major reasons for Meethotamulla Garbage Mountain incident are identification of incorrect dumpsites, improper site management and encroachments to risk/buffer zone area by the general public. A similar incident had taken place on April 24, 2008, followed by the eruption of a large mass of solid waste at the previous dumpsites at Bloemendhal.

The major reason behind this situation is stakeholders failing to connect with nature, discharging their individual fiduciary duties as citizens of this nation towards the environment. Therefore, both hazards have turned into a disaster. Although, the Constitution provides a Provision (Sec.14 of Article 27) to protect, preserve and improve the environment for the benefit of the people, various governments in office since 1977 have been attempting to shift their economic policies to meet ever increasing trend of demand, implementing various development projects, without paying much attention to nature, which supports our own prosperity and well-being. This is very hard to be valued in terms of money.

Hence, the time has arrived to connect 20 million people with nature, extending multifaceted awareness programmes in different levels from top to bottom and strictly implementing existing environmental related laws towards a positive change. A single body cannot achieve this target alone; rather all stakeholders should gather under one umbrella to make a constructive and sustainable change in the future. Accordingly, progressing towards sustainability requires changes to individual behavior and mindsets of general public; but also requires structural changes, such as better choices and even less consumption as well as more efficient green production and consumption.

Eventually, behavioral change from the top to bottom towards a better environment should be initiated by the government, integrating all the stakeholders into a Centre point and empowering them to formulate necessary policy measures towards a better environment for future generation.



**Dr. Fareena Ruzaik** is a Senior Lecturer attached to the Geography Department, University of Colombo. She received a B.A. (Hons.) Second Class Upper Division in Geography in 1994, University of Peradeniya, Sri Lanka, M.Sc Degree in Forestry and Environmental Management in 2002, University of Sri Jayawardenapura, Sri Lanka, completed Certificate Course in Teaching Higher Education (CTHE) in 2007, SDC, University of Colombo and Ph.D (A geographical perspective of the issues related to the disposal of urban solid waste in the Wet and Intermediate Agro -Ecological Zones in Sri Lanka) from University of Colombo.